உ

கடவுள் துணை.

நீதிநெறிவிளக்கக்

கீர்த்தனம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

117

விளம்பரம்.

சாதகாலங்காரம்,

மூலமும் - உரையும்.

—(*)—

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

கடவுள் துணை.

நீதிநெறிவிளக்கக்கீர்த்தனம்.

நேரிசை வெண்பா.

சீராருஞானச் செழுஞ்சுடரா யன்பர்களுக்
காராவமுதமா யாரணமா - யேராரு [ம்
முச்சுடராய்முக்குணமாய் முப்பொருளாய்நின்றொளிரு
அச்சுதனர் பூங்கழற் காப்பாம்.

தரு-புன்னாகவராளி-ராகம்-ஆதிதாளம்.

நல்லவருடன்கூடு மனமே
நாரணன்புகழ்பாடு

கல்லைப்பெண்ணாக்கிய காகுத்தன்பதங்களை
அல்லும்பகலும்போற்றி அபலருறவைவிட்டு நல்

மைப்படிகண்ணாளென்னு மனைவிமுகம்பாராமல்
தப்படிநடக்கின்ற தகையிலார்தமைவிட்டு நல்

பெண்டாட்டிபேச்சைகேட்டுபெற்றவளைமொத்துகின்ற
சண்டாளருறவைத் தாரணிதனில்விட்டு நல்

வாத்தியார்கூலியை வாயிற்போட்டுக்கொண்டு
கூத்தியாருக்குக்கொடுக்குங் கொடியபருறவைவிட்டு நல்

சுத்தமானதாய்தந்தைக்குச் சோறுதண்ணீர்காட்டாமல்
உற்றபெண்டுபிள்ளைகளோடுண்ணும்பாதகரைவிட்டு ()

பெண்டாட்டியுடன்சேர்ந்த பேச்செல்லாம்பிறருக்குக்
கொண்டாட்டமாயுரைக்குங் கொடியருறவைவிட்டு நல்

கொண்டவள்கைசோற்றைவிட்டுக் கூத்தியார்கைசோற்
றை உண்டுகாலங்கழிப்போ ருறவையுலகில்விட்டு நல்

பத்துமாதந்தாங்கிப்பெற்றுப் பால்கொடுத்துவளர்த்தப்
பெற்றதாய்க்குகஞ்சிவாருப் பெரும்பாவிகளைவிட்டு நல்

ஊழ்வினைநீக்குங்கதைகண் மூதுலகிற்கேளாமல்
கோள்களைகேட்கச்செவியை கொடுக்கும்பேர்களைவிட்டு

சந்திஜபதபஹோமம் சாஸ்திரங்கள்யாவும்விட்டு
அந்திபகல்கடிலாசி யாடும்பாதகரைவிட்டு நல்

பெற்றவளைத்திட்டுதற்கும் பெண்டாட்டிக்குநன்றாகக்
கற்றுக்கொடுக்குங்கொடிய கயவருறவைவிட்டு (நல்)

தாய்பெண்ணுக்கு புத்திசொல்லுதல்.

புன்னாகவராளி-ராகம்-ஆதிதாளம்.

சேரவேண்டாமயிலே யென்சொல்புத்தியை
செவ்வையாய்க்கேள் தையலே.

நாரணனாதிதெய்வம் நாயகனேயென்று
நம்பும்பெண்களோடல்லால் நலமிலாப்பெண்களுடன் ()

விடியற்காலத்தெழுந்து வீட்டுவேலைப்பாராமல்
தடிப்போலதூங்குகின்ற தசையிலாப்பெண்களுடன் ()

காமனாரைப்போலேதன் கணவனைப்பெற்றெடுத்த
மாமனார்க்குக்கஞ்சிவாரா மாபாவிகளுடனே (சே)

எட்டுவீட்டுசண்டையைத்தா னிருக்கும்வீட்டிலிருந்தே
சட்டமுடனிழுக்கின்ற தண்டுபஜாரிகளுடன் (சே)

மாப்பிள்ளைக்கொருவிதமு மச்சினர்க்கொருவிதமும்
சாப்பாட்டில்வஞ்சனைசெய் சதிகாரப்பெண்களுடன் ()

மாமியார்க்கெதிரிற்காலை மடக்காமல்நீட்டிக்கொண்டு
சாமியாரைப்போலிருக்குஞ் சறுதார்பெண்களுடனே()

ஓரகத்தினாத்தினரை யோரவஞ்சகஞ்செய்து
தீரமுடன்சிலுவாணஞ் சேர்க்கும்பெண்களுடனே ()

நாக்கெட்டுப்போம்படி நாயையும்பூனையையும்
சாக்கிட்டுவைதில்முதற் றூம்பூலம்வாங்குவோரை (சே)

ஒருநாளுக்கொருவர்க்கன்பா யுவந்திட்டசோற்றினைப்
பலநாளுமேச்சிக்காட்டும் பாவைமாருடனே நீ (சே)

கள்ளப்புருடருடன் கலந்ததினாற்கிடைத்தப்
பிள்ளைகளைக்கரைக்கும் பெரும்பாவிகளுடனே (சே)

புருஷன்மடியிற்கையைப் போட்டுநடுத்தெருவில்
வருவார்போவார்சிரிக்க வம்பாடும்பெண்களை (சே)

வாயில்வருவதெல்லாம் வர்ணச்சாரமில்லாமல்
நாய்போலேகுலைக்கின்ற நயமிலாப்பெண்களுடன் (சே)

கொண்டவனடித்தாற் கூடையினாலடித்து
அண்டைஅயலறிய அழுகின்றபெண்களுடன் (சே)

தன்னிடத்தில்குற்றங்கள்ஜாய்தியாய்வைத்துக்கொண்டு
அன்னியர்குற்றமெடுத்து அதிகம்பேசும்பெண்களை ( )

அண்டைவீட்டுக்காரிக்கவள் ஆம்புடையாநகைசெய்தா
ல் கண்டுசகிக்காமலேதன கணவனைக்காய்பவளை (சே)

மாத்தரையில்துன்மார்க்க வார்த்தைகளைப்பேசுகின்ற
கூத்துகளைப்போய்பார்க்கும் கொடியபெண்களுடனே ( )

கணவன்சம்பாதனையைக் கண்டுசெலவுசெய்து
கணவனைமீத்தாமல் கடன்காரராக்குவோரை (சே)

அண்டைவீடுஎதிர்வீடு எல்லாவீடும்நுழைந்து
சுண்டுகறிபதார்த்தம்பார்க்குஞ்சுறணைகெட்டவருடன்()
பூர்த்தியாய்வீட்டில்திருடும்பொருள்களையண்டவீட்டில்
சேர்த்துவைத்துமோசம்போக்குந் தீயபெண்களுடனே
ஊற்றைப்பல்லை விளக்காமல் உதையத்தெழுந்திருந்து
சோற்றுப்பானைதொடுகின்றசுறணைக்கெட்டவருடன் ()

அன்புடையசோறுகறி அமாவாசைக்காக்கிவைத்துப்
பின்புதலைமுழுகும்ப் பீடைபிடித்தவளுடன் (சே)

வீட்டில்மாமியாரைத்தெரு விளக்குந்துடப்பத்தைக்
காட்டிக்காட்டிதிட்டுகின்ற கடைகெட்டவளுடனே ()

கனிவுள்ளபுருஷனைக் கண்டபடிதிட்டியூர்க்குத்
தனிவழியோடுகின்ற சண்டாளப்பெண்களுடன் (சே)

தாய்தந்தைபேச்சைத்தள்ளிதன்பேச்சைகேட்பானென்
று வாய்ச்சோற்றில்கணவர்க்கு மருந்திடும்பாவியுடன்()

இதுவுமது.

புன்னாகவராளி-ராகம்-ஆதிதாளம்.

நல்லமழைபெய்யுமம்மா கருப்புநீங்கி
நாடுசெழிக்குமம்மா

இல்லாதவனாயினு மிருப்பவனாயினும்
கல்லாதவனாயினுங் கணவனைப்பூசித்தால் நல்

வேறொருத்தியைகணவன் விரும்பினபோதிலும்
மாறுவார்த்தைசொல்லாதமனையாட்டியிருந்தாக்கால் நல்

தன்னுடையநகைகளை சக்களத்திக்கிபென்றாலும்
நன்னயமாகக்கொடுக்கும் நாயகிகளிருந்தாக்கால் நல்

மாமனாரைமாமியாரை மாநிலத்தில்தெய்வமென்று
பூமலர்க்கொண்டர்ச்சிக்கும் பூவையர்களிருந்தாக்கால்

காலையிலெழுந்திருந்து கணவனடிபணிந்து
சீலமுடன்வீட்டுவேலை செய்யும்பெண்களிருந்தால் நல்

தன்குழந்தையைப்போலும் சக்களத்திப்பெற்றதை
இன்பமுடன்பார்க்கின்ற வேந்திழைமாரிருந்தாக்கால் ()

நாயகனடித்தாலும் நடுவொன்றும்பேசாமல்
வாய்மூடிக்கொண்டிருக்கும் வனிதையரிருந்தாக்கால் நல்

வந்தவிருந்தினரை மகிழ்வோடுபசரித்து
அந்தமுள்ளநற்புகழை யடையும்பெண்களினால் நல்

சத்தியந்தயாளதர்மம் சாந்தமுதலான
உத்தமகுணங்களை யுடையபெண்களிருந்தால் நல்

மாமழிசைஜெகநாதன் வழுத்துநீதியின்படி
பூமியில்நடக்குமென்னைப்புரக்குந்தாய்மார்களாலே (நல்)

நீதிநெறிவிளக்கக் கீர்த்தனம்,

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமத் வரவரமுநயே நம:

சென்னை இந்துபிரீசிங் சொசைட்டி

கோவிந்தராஜுலு முதலியாரா லியற்றிய

ஸ்ரீ கிருஷ்ண லாலி.

காப்பு.

வஞ்சித்துறை.

திருசட கோபனங்
குருபதம் வாழ்த்தியே
மருகிருஷ்ண லாலித்
தெருளுட ஹேதுவாம்.

ஸ்ரீகிருஷ்ணலாலிகேதாரம்.

சிங்காரப்பெண்கள்வாரீர்-கிருஷ்ண
சீர்மைமலிலாலிகூற

மங்களகரங்கள்வருமே-மாதவன்
மனமுற்றிலகும்லாலி. 1

பச்சையுலகம்பமீது-கடைந்திட்ட
பவளபொதிகைபொருத்தி
இச்சையுடன்வச்சிரத்தாற்-செதுக்கிய
யேமதூண்களுமமர்த்தி 2

சுயரூபமெனக்காட்டினார்-மண்டபஞ்
சுந்தரப்பொன்னினாலே
நயந்தெரிமணிக்கோவையு-முத்தார
நன்னயவிதானமீதே. 3

நவமணித்தொட்டிலுச்சிகெ உயர்தங்க
காணயக்கொலுசுமாட்டி
புவனத்தாரதிசயிக்க-விச்சித்ர
பூமாலையைசூட்டினார். 4

தேவசமுகங்கள்கண்டு-இந்நகர்
தேவேந்திரபுரமிதென்ன
ஆவலுடனாரதி-யிசைபாட
அமரருடனங்குவந்தார். 5

சங்கீதஞ்சகிகள்பாட-கிருஷ்ணர்க்கு
சம்பங்கிதமிட்டே
மங்களஸ்நானமுகிழ-ஆட்டினார்
மங்கையர்களழகும்பெறவே. 6

சொகுசுடன்கிருஷ்ணர்க்கு-மாணிக்க
மேபொன்னுடைகட்டி
அகணிதமிருந்தமணிகள-ஸ்தாபித்து
ஆபரணம்பூட்டலானார். 7

புலிநகக்கொலுசுகளையே-கிருஷ்ணருக்கு
பூட்டியேரிலைவமார்கள்
கலிவிலாபாஜிபந்தை-புஜமதனி
நலமுடன்கட்டினார்கள். 8

தகதகெனுங்குண்டலத்தை-காதினில்
தரித்துதாமோதரர்க்கே
நிகரிகெனுமரைஞாணுடன்-சதங்கையு
நேருடன்கட்டலானார். 9

அலங்குலியமாதரணையாய்-விரவதனி
லமையவேவரிசையாகச்
சிங்காரமாகச்செய்தார்-ஸ்ரீ கிருஷ்ணனை
சிலைநுதற்பாவைமார்கள். 10

பீதங்கணகொலுசுகள்-கைகட்குப்
பேரொளிசெயத்தரித்து
பாதங்களினங்களில்-ரத்தினப்
பாடகந்தண்டைகொலுசும் 11

குருவுள்ளபணிகள்பூட்டி-சிரசிற்கு
குப்பிசடையில்லைமாட்டி

இருசுமல்லிகைமுல்லையுஞ்-சம்பங்கி
இருவாட்சிபாரிஜாதம். 12

குருவேறுதவனமருவு-மாரமுட
குழலதனிற்சூட்டிமிகவே
அரிச்சந்தனுதிப்புனுகு-ஜவ்வாது
ஆமோதகற்பூரமும் 13

உரமாகஸ்தூரியுங்-கலந்துமே
ஒப்புடன்கூட்டிபெண்கள்
அரியுரகக்தன்னிலுங்-கண்டத்தி
லமரிக்கையாய்ப்பூசினர். 14

முத்துகிருஷ்ணன்றனக்கே-நெற்றியின்
மோககஸ்தூரிதிலர்தம்
சித்திணிகள்வெத்துயாலஞ்-சேர்ப்பித்து
திருஷ்டிகழிபொட்டுவைத்தார். 15

பேரிமத்தளசங்கமுந்-தாதியொடு
பேரொலியெக்காளபடகம்
வாரிபோற்குமுறசெய்தே-நாகசுர
வாத்தியமுழக்கினர்கள். 16

ரம்பையூர்வசிமேனகை-திலோர்த்தமை
ரமணீயநடனமாட
தும்புருவுநாரதர்களே-யாழிலெழு
சிரசுதிகளோடுபாட. 17

பந்துஜனமொருலட்சமும்-வேதாந்த
பார்ப்பார்களொருலக்ஷமுஞ்
சுந்தரிக்கொருலக்ஷமும்-பிராமண
சுமங்கலிகளொருலக்ஷமும். 18
அந்தமாசபையைநோக்கி-பூமழைக
ளமரமாதவர்கள்பொழிய
வந்தியர்க்கவியில்புகழ்-கிருஷ்ணரிட
வைபவம்பாருமீர்காள். 19
நவமோகனுங்கனுக்கே-கோபிகைகள்
நாகரீகங்கள்செய்து
புவனிதனிலேயுள்ளவர்-துதிசெய்யும்
புருஷோத்தமனைவேண்டினர். 20
பவரோகவயித்தியனம்மா-இக்கிருஷ்ணன்
பக்தரைக்கார்ப்பானம்மா
கமலநாபனைதொட்டிலில்-வைத்தனர்
கஞ்சமுகவனிதைமார்கள். 21
லாலிமங்களமிசைத்தார்-கோபிகா
லாவண்யப்பெண்கள்கூடி
பாலன்றொட்டினிலிருக்க-பத்தியுடன்
பலவிதங்கூறினரே. 22
லாலிவைகுந்தவாசா-ஸ்ரீ ஹரி
லக்ஷ்மிமனோவுல்லாசா
லாலிபன்னகசயனனே
லாலிஸ்ரீ பரமபுருஷ 23

லாலிமச்சாவதாரா-ஸ்ரீகிருஷ்ண
லாலிகூர்மாவதாரா
லாலிவராஹாவதாரா-பவதுரித
லாலிசிம்மஹாவதாரா. 24
லாலிகுறலாவதார-கோவிந்த
லாலிபரசுராமனே
லாலிராமாவதாரா-பலராம
லாலிகிருஷ்ணாவதாரா. 25
லாலிபௌத்தாவதாரா-ருஷிகேச
லாலிகற்கியாவதாரா
லாலிசதவிரூபனே-மரபுவனி
ரட்சித்தசத்வகுணனே. 26
தேவகிவசுதேவரின்-புத்திரா
திவ்வியமங்களமூர்த்தியே
தேவாதிதேவர்செய்யுந்-துதிபெற்ற
தேவனேதிக்குநீயே. 27
காவவாககருணைநிதி-ஸ்ரீகிருஷ்ண
கலியாணகுணஸ்ரீபதி
பாவமறவருள்செய்யுவா-முரஹரி
பலபத்ரவநுவரசே 28
நந்தகோபனசோதையின்-புத்ரனாய்
நல்விருளிலேபடைந்தே
சந்ததம்பசுநிறைகளை பாலித்து
தயிர்தளவிலுண்டபெரியோய் 29

நந்தகோபன்மனையிலே-திருமாது
நடனங்கள்புரியக்கண்டு
இந்துமுகசோதைதன்பபாலனை
யீந்திடம்மகிழ்ந்தமலதாய். 30
என்னநோன்புநூற்றலோ-பூர்வத்தி
லியாதுதபஞ்செய்தாளோ
என்னபுண்யஞ்செய்தாளோ-அசோதைதா
னென்னதர்மஞ்செய்தாளோ. 31
சாமயசுரூபனுடைய நிதிகட்கு
சரியாதுபுகழ்வதம்மா
சோமாவிபிரமனரனுந்-தேவர்களுந்
துதிசெய்யவேவிறந்தான். 32
வேதவேதியருக்கெல்லாம்-கோதானம்
வேணலட்சங்கொடுத்தே
வாதனங்கனகரஜீத-வஸ்திரம்
வரையாதுதான்கொடுத்தார். 33
கந்தபுஷ்பாதிகளாலே-அனைவற்குங்
கனமாகவேபதிர்ந்து
நந்தநந்தனைக்கண்டு-அசோதைதா
நந்தனுமுளங்களித்தார். 34
க்ஷீராப்திசயனனுக்கும்-கிருஷ்ணனிட
சீலச்சரித்ரமதையே
கோறிடயகூறினோரும்-கேட்போருங்
குவைவினிதிபெற்றுவாழ்வார் 35

தாயுதா திசையேக்குமே-சதபுத்ர
தனதானியம்பெருகுமே-சொல்லடி
ஈறிலாச்சக்திவருமே-சொல்லடி
இகபரசௌக்யந்தருமே 36
கோயமாநகரில்வளரும்புஜபல
கோத்திரந்தனிற்பிறந்த
பாயஞ்சின்னரௌது-ஆந்திரப்
பாஷையிற்பாடியதையே. 37
ஸ்ரீ விசிஷ்டாத்துவைத-சித்தாந்த
சென்னைபிரபோதசங்கம்
நேயமாயதிலொருவனும்-வைனவரி
னிமலதாட்டேளியணியும். 38
கோவிந்தசாமிதமிழால்பாடுங்
கோபாலலாலிதன்னை
பூவிலுள்ளோர்களன்பாய்-சொல்லிடில்
புகழ்பெற்றுவாழ்வார்மாதோ. 39
லாலிலாலேயலாலி-ஸ்ரீகிருஷ்ண
லாலிலாலேயலாலி
பர்லசகிமார்கள்லாலி-கோவிந்த
பாதயுகமங்கள்லாலி 40

ஸ்ரீ கி ரு ஷ் ண லா லி

மு ற் றி ற் று.